
அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச்சுற்றுக்கு மட்டும்

உயிர் : 02
குரல் : 01

ஜனவரி 2024 – மார்ச் 2024




## பருவநிலை மாற்றங்களும் நமது சுற்றுச்சூழலும்

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்

**சிட்டெறும்பு பேசுது**

உயிர் : 02 | குரல் : 01

ஜனவரி 2024 – மார்ச் 2024

ஆசிரியர்கள்

L. யுவராணி, H. யுவஸ்ரீ

இணை ஆசிரியர்கள்

S. ஜிஷ்ணு, K. நிஷாந்த்
G. விநாயகமூர்த்தி

உதவி ஆசிரியர்கள்

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி,
P. தமிழ், S. லோகேஷ்,
V. சுஜிதா, S. தங்கவித்யா,
S. சக்தி முருகன், R. கன்னியம்மா,
M. யுவராஜ்

நிருபர்கள்

S. நிவிஸ், A. ஹேமன்,
V. நாகராணி, M. ஷாகினா,
S. ஓவியா, D. ரொபினா,
M. ஜெனிலியா

ஓவியர்கள்

C. ஜெகன் S. ராபின்
V. நாகவள்ளி R. தேவன்

கௌரவ ஆசிரியர்

திரு. மோ.கணேசன்
நிர்வாக இயக்குநர், வாலு டிவி

நிர்வாகம்

முனைவர் வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

ஒருங்கிணைப்பு

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல்
வழிநடத்துநர்

வழிநடத்துநர்

திரு. K. சுரேஷ்
விதை நெல் உறுப்பினர்

வடிவமைப்பு

ஆசிரியர் குழு
துரை. அருணாச்சலம்

தொடர்பு முகவரி

அருணோதயா குழந்தைத்
தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு, இராயபுரம்,
சென்னை - 600 013.
Phone: 044 - 42632264
Mobile: 94440 51529 / 89252 74527

மின் அஞ்சல்

arunodhayaorg@gmail.com

இணையதளம்

www.arunodhayacentre.in

# ஆசிரியர் உரை

## நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்!

அனைவரும் நலமுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களின் தொடர் ஆதரவினால் இதோ நம் சிட்டெறும்பின் மூன்றாவது இதழை வெளியிட்டுள்ளோம்.

இந்த இதழ் காலநிலை மாற்றம் மற்றும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஆம் காலநிலை மாற்றம் குறித்து நாம் அறிந்து கொள்வது தற்சமயம் மிகவும் அவசியம்.

ஏனெனில் இப்போது அனுபவித்து வரும் இன்னல்கள் நாம் அறிந்ததே. கடும் வெயில், ஆபத்தான வெள்ளம், மக்கள் வாழ்கையைப் புரட்டிப்போடும் புயல், காட்டுத் தீ போன்ற இயற்கை சீற்றங்கள் குறித்து நீங்கள் அறிந்ததே!

இவை, மனிதர்கள் இயற்கையைச் சுரண்டுவதாலும், இயற்கை வளங்களை அழிப்பதாலும் ஏற்படும் அபாயமே. இந்நிலை நீடிக்குமாயின் பூமியில் மனிதர்கள் வாழும் சுழல் இல்லாமல் போகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

குழந்தைகளாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?

காலநிலை மாற்றம் குறித்தும், அதன் காரணிகள், தாக்கம் குறித்தும் நாம் அறிந்து கொள்வது அவசியம்.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த தனி மனிதர்களின் நடத்தை மாற்றம், சமூக அக்கறை, சமூக நீதி, சுற்றுச்சூழல் நீதி போன்றவை குறித்த விழிப்புணர்வினை குழந்தைகளாகிய நாம் அடைவதுடன், நம் பங்கேற்பின் மூலம் மக்களுக்கும், நம்மைப் போன்றக் குழந்தைகளுக்கும் அளிப்பது இன்றைய சூழலில் மிகவும் அவசியமான ஒன்று. மேலும் காலநிலை மாற்றத்திற்காக சட்டம் என்ன சொல்கின்றது என்பதை அறிந்து அவற்றை அரசின் பார்வைக்குக் கொண்டு செல்வதும் நம் கடமையாகும்.



இயற்கையோடு இயைந்து வாழ்வோம்! காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த நமது பங்களிப்பினைக் கொடுப்போம்.

**H.யுவஸ்ரீ,** இதழ் ஆசிரியர்

# குழந்தைகள் சங்கத்தின் மூன்று மாத செயல்பாடுகள்

ஜனவரி 2024 – மார்ச் 2024

**அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 வரையிலான செயல்பாடுகள்**

### குழந்தைகள் பங்கேற்பு



ஜனவரி 3, 4 தேதிகளில் அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு 2023 செயல்பாடுகளில் மதிப்பீடும் 2024 ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை திட்டமிடலும் நடைபெற்றது. இந்த செயல்பாட்டில் குழந்தைகள் சங்கக் குழந்தைகள் கலந்து கொண்டனர்

### புகையில்லா போகிப் பண்டிகை



குழந்தைகளுக்குப் புகையில்லா போகிப் பண்டிகை குறித்த விழிப்புணர்வு ஊர்வலம், 13.1.24 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதில் குழந்தைகள் சங்கக் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் விழா



சுய உதவிக் குழு பெண்களுடன் இணைந்து கார்கில் நகர் குழந்தைகள் சங்கக் குழந்தைகள் பொங்கல் விழா கொண்டாடி மகிழ்ந்தனர்.

### புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு சல்வார் கொடுக்கப்பட்டது. குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.



மேலும் இப்புயலில் புத்தகப் பைகள் மற்றும் பள்ளிக் கல்வி உபகரணங்களை இழந்த குழந்தைகளுக்கு புத்தகப் பைகளும், பள்ளிக் கல்விக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் நன்றி கூறினார்கள்.

## தேசிய பெண் குழந்தைகள் தின விழா




தேசிய பெண் குழந்தைகள் தின விழா 24.1.24 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பெண் குழந்தைகளின் உரிமை குறித்த விழிப்புணர்வு நிகழ்வு, குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## குழந்தை கவுன்சிலர் கூட்டம்



பத்து வார்டுகளில் குழந்தை கவுன்சிலர் மூலம் நகரசபை திட்டமிடல் நடைபெற்றது. இதில் கோரிக்கை தயார் செய்தல், நகரசபைக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டது.

## நகர சபைக் கூட்டம்



குழந்தைகள் நகர சபைக் கூட்டம் ஜனவரி 26 அன்று பகுதி அளவில் பத்து வார்டுகளில் நடைபெற்றது. கலைநிகழ்ச்சிகள் மூலம் தங்களது கோரிக்கைகளை வெளிப்படுத்தினர். இதில் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி தலைவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்தினார்கள்.

## நாடாளுமன்ற தேர்தலில் குழந்தைகள் பங்கேற்பு



மார்ச் 26 அன்று நாடாளுமன்ற தேர்தலுக்காக குழந்தைகள் சங்கத்தில் இருந்த குழந்தைகளும் தங்கள் பிரச்சனையை கோரிக்கையாக எழுதினார்கள். கலந்துரையாடல் செய்து அவர்கள் பகுதியில் உள்ள பிரச்சனைகள் குறித்து பொதுவான கோரிக்கைகளை எழுதியது மிகவும் சிறப்பாக இருந்தது.

## சிட்டெறும்பு இதழ் - திறன் வளர்ப்பு பயிற்சி



‘சிட்டெறும்பு பேசுது’ இதழியல் பயிற்சி ஜனவரி 25 அன்று நடைபெற்றது குறித்து குழந்தைகள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். இதில் எளிமையாக சுருக்கி எழுதுவது எப்படி, பேட்டி எடுப்பது எப்படி, சிறுகதை எழுதுவது எப்படி, ஓவியம் வரைதல் மற்றும் போட்டோ எடுப்பது எப்படி என்று கற்றுக் கொண்டனர்.

## குழந்தைகள் சங்கக் கூட்டங்கள்



பிப்ரவரி 17 அன்று குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது. பிப்ரவரி 18-ஆம் தேதி குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.
இதில் 80 குழந்தைகள் கலந்து கொண்டனர், தங்கள் செயல்பாடுகள் குறித்து திட்டமிடல் மதிப்பீடு செய்தனர்.
குழந்தை கடத்தல் குறித்தும், குழந்தைகளின் பிரச்னைகள் குறித்தும் பேசி முடிவெடுத்தனர்.

## குழந்தைகள் சங்கக் கூட்டங்கள்



மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்பிலிருந்து மனதளவில் குழந்தைகள் வெளிவர குழு ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு அவர்களின் பயத்திலிருந்து வெளிவந்து தமது கல்வியில் கவனம் செலுத்தினர்.

## குழந்தைகள் சங்கத் தேர்தல்



பகுதி அளவு குழந்தைகள் சங்கத் தேர்தல் பிப்ரவரி மாதம் நடைபெற்றது. அந்த தேர்தலில் புதியதாகத் தலைவர், செயலாளர், பொருளாளர் என்று மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தோம். அடுத்த ஆறு மாதங்களுக்கு இந்த தலைவர்கள், எங்கள் சங்கங்களை வழி நடத்துவார்கள்.

## குழந்தைகள் பாதுகாப்பு குழு



வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு 20.2.2024 அன்று 38வது வார்டில் உருவாக்கப்பட்டது. இதில் 16 உறுப்பினர்களும், பார்வையாளர்களாக 10 பேரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை அருணோதயாவின் இயக்குனர் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

## பள்ளி குழந்தைகள் மன்றக் கூட்டங்கள்



பள்ளி குழந்தைகள் மன்றக் கூட்டங்கள் 15 பள்ளிகளில் தலைமைத்துவப் பண்புகள் என்ற தலைப்பில் நடைபெற்றது. 450 குழந்தைகள் கலந்து கொண்டு தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொண்டனர்.



டவர் கேம் வைக்கப்பட்டது. அதில் அடித்தளம் வலுவில்லை என்றால் கட்டிடம் நிற்காது என்ற மையக்கருத்துடன் செய்யப்பட்டது. அந்த டவர்கள் மிகவும் வலுவானதாக இருக்க வேண்டும். வலுவான டவர்களைக் கட்டியவர்கள், அவர்களின் சங்கங்களையும் வலுவாகப் பார்த்துக் கொள்வார்கள் என்று கூறப்பட்டது.



S. ஜிஷ்ணு, 8-ஆம் வகுப்பு

# பருவநிலை மாற்றமும் நமது சுற்றுச்சூழலும்

நான் சென்னையை அடுத்த எண்ணூரில் உள்ள சுனாமி குடியிருப்பில் வசிக்கிறேன். நான் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ளேன். சங்கத்தின் நெட்வொர்க் மீட்டிங்கிற்காக கொருக்குப்பேட்டைக்குச் சென்று இருந்தேன். அங்கு பல பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள் வந்திருந்தனர். அந்த சந்திப்பில் தற்போதைய நிலையில் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்னென்ன என்று, குழந்தைகள் தங்களுக்குள்ளே குழுவினை அமைத்து, எந்த மாதிரியான சவால்களை மேற்கொள்கிறார்கள் என்று, தங்களின் பல கருத்துக்களை தெரிவித்தனர். அவற்றிலிருந்து பருவநிலை மாற்றம் குழந்தைகளையும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்றது என்பதை தெரிவித்தனர். இவை சரிதான். ஆனால் பருவநிலை மாற்றம் ஆபத்தானதா? பருவநிலை மாற்றம் எதனால், யாரால் ஏற்படுகிறது என்பதனைக் காண்போம் மற்றும் அதனைப் பற்றி முழுமையாக சிந்திப்போம்.

பருவநிலை மாற்றம் உலகளவில் காலநிலை மாற்றம், சுத்தமான காற்று, பாதுகாப்பான குடிநீர், சத்தான உணவு வழங்கல் மற்றும் பாதுகாப்பான தங்கும் இடம் போன்றவற்றை அச்சுறுத்துகிறது. உயரும் கடல் மட்டம், அடிக்கடி மாறும் தீவிர வானிலை நிகழ்வுகள், வெப்ப அலைகள், வறட்சி, காட்டுத்தீ, கொசுக்களால் பரவும் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் அதிகரிப்பு ஆகியவற்றால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் பாதிப்படைகின்றன

பருவநிலை மாற்றத்திற்கான விளைவுகள், பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகள் நகர்ப்புறங்களிலும் மற்றும் நகரில் வாழும் மக்களையும் குழந்தைகளையும் பாதிக்கிறது என்று கிளைமேட் டிரஸ்ட் அமைப்பு கூறியுள்ளது. ஏற்கெனவே வளி மண்டலத்தில் குவிந்துள்ள கரிமில வாயுவை அகற்றுவது இயலாது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இதனால்தான் பருவநிலை மாற்றம் மிகவும் ஆபத்தானது என்று கிளைமேட் டிரஸ்ட் அமைப்பு கூறுகின்றது.

பருவநிலை மாற்றம் எதனால் மற்றும் யாரால் ஏற்படுகிறது? உலகில் உள்ள காடுகள் நாம் சுவாசிக்கும் காற்றை தூய்மைப்படுத்துவதோடு தண்ணீர் சுத்தமாக இருப்பதற்கும் உதவுகின்றன. காடுகள் மூலம் உலகில் சுமார் 1 மில்லியன் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தைப் பெற்று வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் சில மக்கள் காடுகளை அழிப்பது, மோட்டார் வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துவதன் மூலம் புகையை அதிகமாக வெளியிடுவது, தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் நச்சுத்தன்மை கொண்ட எஸ்.ஓ.2, என்.ஓ.2 போன்ற வாயுக்கள் வளிமண்டலத்தில் கலப்பதுடன் அவை மேகங்களில் கலந்து அமில மழையைப் பொழிகின்றது. இதனால் குடிநீர் தொட்டிகள், கிணறுகள், ஆறுகளில் அமில மழை கலந்து அதைக் குடிக்கும் மக்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பலவிதமான நோய்களை பரப்பி வருகின்றன. இதனால் புற்றுநோய்கள் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்பட வாய்ப்பாக அமைகிறது.

மனிதனின் சில செயல்பாடுகளால் ஏற்படும் புவி வெப்பமயமாதலின் மூலம் துருவப் பனிப்பாறைகள் உருகி அவை கடலில் கலந்து, கடலில் நீர் மட்டம் அதிகரிப்பதுடன் அதிகப்படியான நீராவியை உருவாக்குவதால் அதிக கன மழை பெய்வது மற்றும் தாழ்வான பகுதியில் வெள்ளம் புகுவது போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக 2016-இல் வந்த வர்தா புயல் மற்றும் கடந்த வருடம் வந்த மிக்ஜாம் புயல் போன்ற இயற்கை சீற்றத்தால் கொருக்குப்பேட்டை மற்றும் எண்ணூர் குப்பம், சடையன் குப்பம் போன்ற இன்னும் பல தாழ்வான பகுதிகளில் நீர் புகுந்து மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் முடக்கப்பட்டது. குழந்தைகளின் படிப்பு மற்றும் உடல் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது.

இவை மட்டுமில்லாமல் கடந்த 2020, ஜனவரி 27 அன்று தொடங்கிய கொரோனா பெருந்தொற்றால் பல நடுத்தர மக்கள் மட்டுமின்றி உயர்தர மக்கள் வாழ்வையும் புரட்டிப் போட்டது. பள்ளி, கல்லூரிகள், தொழிற்சாலைகள் முடங்கியது. முக்கிய தேவையான உணவு போன்றவை கிடைக்காமல் மக்களும் குழந்தைகளும் தவித்தனர். எனவே இவை போன்ற இயற்கை மற்றும் பருவநிலை மாற்றங்களையும் நோய் தொற்றுக்களையும் தவிர்ப்போம். நமது சுற்றுச்சூழலை நாமே காப்போம்.



**S. விஷால், 12-ஆம் வகுப்பு**

# இயற்கையே நிரந்தரம்!

இந்த உலகில் நிரந்தரமானவர் என்று எவரும் கிடையாது.
நிரந்தரமானது இயற்கை மட்டுமே.

நான் விடும் மூச்சுக்காற்றில்தான் நீ வாழ்கிறாய்.
என்னை அழிப்பது உன்னை நீயே வதைப்பதற்கு சமம்.

ஏழை பணக்காரன் என்ற பாரபட்சம் இல்லாமல்
கொடுப்பது இயற்கை மட்டுமே.

நாம் அழைத்தால் மழை வராது.
ஆனால் மரம் அழைத்தால் மழை வரும்.

நீ இயற்கையை அழிப்பது சரிதான் என்றால்
உன்னை இயற்கை அழிப்பதும் சரிதானே!





**D. ஹேமஸ்ரீ, 9-ஆம் வகுப்பு**

# தண்ணீர்

**இன்றைய நிலையில் நீர் பற்றாக்குறை உச்சத்தில் இருக்கிறது. குறிப்பாக சிறு குறு கிராமங்களில் இந்த நீர் பற்றாக்குறை அவர்களின் வாழ்க்கையை பெரும் சிக்கலாகவே மாற்றி வருகிறது. இந்த நிலையை உணர்த்துவதற்காக அமைந்ததே இந்த தொடர்கதை.**

**தொடர் கதை**

வாடிப்பட்டி என்னும் சிறு கிராமம் ஒன்று உள்ளது. அங்கு எப்போதாவது வரும் சரக்கு ரயில் மூலம் தண்ணீர் திறந்து விடுவார்கள். அந்த கிராமத்து மக்கள் அந்த தண்ணீரைப் பிடித்து இரண்டு அல்லது மூன்று நாள் வரை அவர்களது தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வார்கள். ஆனால் அந்த தொடர் வண்டி வருவதை அறிந்துகொள்ளும் சிறுமிகளும் பெண்களும் சற்று முன்னதாகவே குடத்தைத் தூக்கிக்கொண்டு அந்தத் தொடர்வண்டி நிலையத்திற்கு விரைந்து செல்வார்கள்.

அன்றும் அப்படிதான் தொடர்வண்டி வருவதை அறிந்து குடங்களைத் தூக்கிக்கொண்டு ரயில் நிலையம் நோக்கி வேகமாக ஓடினாள் இந்திரா. ஏழெட்டுப் பெண்கள் ஓடி வந்து இந்திராவை முந்தப் பார்த்தார்கள். இரண்டு மூன்று குடங்களைத் தூக்கிக்கொண்டு எல்லோரும் புயலைப்போல ரயில் நிலையத்திற்குப் பாய்ந்தார்கள். இந்திரா படு சுட்டியான பெண். முன்பாகவே வந்து இடத்தைப் பிடித்துக்கொண்டதால், ஸ்டேஷன் மாஸ்டர் திட்டுவதைக் கூட அந்த பெண்கள் கண்டு கொள்ளவில்லை. அந்த தண்ணிரை அவர்கள் சில நாட்கள் புழங்குவதற்காகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இந்தத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் பிலாப்பட்டிக்கு போய்தான் தண்ணீர் கொண்டு வர வேண்டும். சுற்று வட்டாரத்தில் எல்லா ஊர்களிலும் தண்ணீர் கிடைப்பதில்லை. புயல் வந்தால்தான் மழை பெய்யும். அதில் கண்மாய், ஊரணி எல்லாம் உடைந்து வெள்ளம் பெருகி மூன்றாம் நாள் மறுபடியும் நீரில்லா பூமியாக மாறிவிடும். பிலாப்பட்டியில் தண்ணீர் கிணறு உள்ளது. 3 மைல் நடக்க வேண்டும். அங்குள்ள கிணற்றில் நீரை இறைத்துப் பயன்படுத்த வேண்டும். மதியம் வரை பிலாப்பட்டி மக்கள் நீரை எடுப்பார்கள். மதியத்துக்கு பிறகு வெளியூர் மக்கள் இறைத்துக்கொள்ள அனுமதிப்பார்கள். மக்கள் கால்கடுக்க வெளியூருக்கு நடந்து சென்றுதான் தண்ணீர் எடுத்து வர வேண்டும்.

**(தொடரும்)**



**K. நிஷாந்த், 9-ஆம் வகுப்பு**

# ரோஹித் மற்றும் அவனது நண்பர்கள்

குட்டிக் கதை

பள்ளியில் முதல் இடைப்பருவத்தேர்வு வரப்போகிறது. அப்போது அந்த பள்ளியில் ரோஹித் என்னும் ஒரு மாணவன் எட்டாம் வகுப்பு சேர்ந்தான். சக மாணவர்கள் அவனை வரவேற்று மகிழ்ந்தார்கள். மாணவர்கள் தேர்வினால் வகுப்பறையில் ஆட்டம் போடாமல் படித்தனர். தேர்வு முடிந்தது. அனைத்து மாணவர்களும் நன்றாகத் தேர்வு எழுதினார்கள். ஆனால் ரோஹித் மட்டும் தேர்வு நன்றாக எழுதவில்லை.

மாணவர்கள் அவனை கேலி செய்யவில்லை. அனைவரும் அவனை நண்பனாக ஏற்றுக் கொண்டனர். ரோஹித் தன நண்பர்களிடம் நான் நன்றாகப் படிப்பேன். பள்ளியில் இடையில் வந்து சேர்ந்ததால் நன்றாக தேர்வு எழுத இயலவில்லை என்றான். அப்போது ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். அவர் சஞ்சய் நல்ல மதிப்பெண் வாங்கியதால் அவனை வகுப்பு தலைவன் என்று அறிவித்தார். ஆனால் சஞ்சய் அந்த பொறுப்பை முறையாகச் செய்யவில்லை.

ரோஹித்தின் நண்பர்களான கவின், சசி, வரதன் என்ற மாணவர்கள் ஆட்டம் போட்டுக் கொண்டிருப்பார்கள். இதைப்பார்த்த ரோஹித் ஆசிரியரிடம் கூறினான். ஆசிரியர் அவர்களைத் திட்டினார். இதனால் அவர்கள் ரோஹித் நட்பை மறந்துவிட்டு திட்டிக்கொண்டு இருந்தனர். இருவரும் சேர்ந்து ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தனர். அதையும் ரோஹித் ஆசிரியரிடம் சொன்னான். இந்த முறை இருவரும் அவனை நீ ஒரு முட்டாள். நண்பன் என்று யாரிடமும் சொல்லாதே. உன்னை நாங்கள் எப்பொழுதும் கேலி செய்ததில்லை. நீ எங்களைப் பற்றி ஆசிரியரிடம் சொல்லிக்கொண்டிருந்தாய். இனி நீ எங்களிடம் பேச வேண்டாம் என்று இருவரும் கூறினார்கள். அதற்கு ரோஹித் நான்தான் உங்களின் உண்மையான நண்பன். ஏனென்றால் ஒரு நண்பன் தவறு செய்யும்போது அவன் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்பது நண்பனின் கடமையாகும் என்றான். இதைக் கேட்ட இருவரும் மனம் திருந்தி நன்றாகப் படித்துக் காலாண்டுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று வெற்றிபெற்றனர். ■



S. ஜிஷ்ணு, 8-ஆம் வகுப்பு

# குழந்தைப்பருவம்

ஒரு நாள் ஒரு பயணி விடுமுறை நாளன்று தனது சொந்த ஊருக்கு செல்ல இரயில் நிலையத்திற்குச் சென்று கொண்டு இருந்தார். தேநீர் அருந்துவதற்காக அருகில் உள்ள கடைக்குச் சென்றார். அந்தக் கடையில் ஒரு சிறுவன் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் ஒரு நபருக்குத் தேனீர் கொடுக்கச் செல்லும்போது அவன் கையில் உள்ள டம்ளர் தவறி விழுந்தது. அவனது முதலாளி அவனை அடித்தார். அந்த பயணி அதை தடுத்து முதலாளியிடம் வாக்குவாதம் செய்தார். அந்த முதலாளியிடம் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், படிக்க வேண்டியவர்கள், குழந்தைப் பருவத்தை மாண்போடும் மகிழ்வோடும் கொண்டாட வேண்டியவர்கள் என்று வாக்குவாதம் செய்து அந்த சிறுவனை அங்கிருந்து கூட்டிச் சென்றார்.

அந்தச் சிறுவனைப்பற்றிக் கேட்டபோது அவனுடைய தாய், தந்தை இருவரும் ஒரு விபத்தில் இறந்ததாகவும், சொந்தங்கள் அவனை விரட்டியதாகவும், வயிற்றுப் பசிக்காக இந்த கடைக்கு வேலைக்கு வந்ததாகவும் அழுதவாறே கூறினான். அந்த பயணி அச்சிறுவனை ஆசிரமத்தில் சேர்த்தார். அவனது படிப்பு செலவை அந்தப் பயணி ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். பிறகு அங்கிருந்து விடை பெற்றார். அந்தச் சிறுவனுக்கு இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. ■



P. உதயபிரியன், 10-ஆம் வகுப்பு

# உயிரி உரங்கள்

மண்புழுக்களில் பல வகைகள் உண்டு. பொதுவாக மண்புழுவானது வளைத்தசை உருளை புழுக்களின் தொகுதியின் கீழ் அமைகிறது. அது உழவர்களின் நண்பன் என்று புகழப்படுகிறது. ஏனெனில் தாவரக் கழிவுகளை உண்டு, அதனால் அதன் உடலில் இருந்து வரும் செரிமானக் கழிவினால், அதன் வாழிட மண்ணை வளப்படுத்துகின்றன. இவற்றின் வாழ்க்கை சுழற்சியால் மண்ணானது மேலும் மிருதுவாக மாறுகின்றது. மண்ணில் காற்றோட்டமும் நீரும் சேர்கிறது. சித்த மருத்துவத்தில் அது பூமியின் வேர் நங்கூழ் என அறியப்படுகிறது. உயிரி உரங்கள் ஆன ரைசோபியம் அசோசியோ அசோஸ்பைரில்லம் மற்றும் நீல பச்சைப் பாசி ஆகியவை பல காலமாக உபயோகத்தில் உள்ளன. ரைசோபியம் வினோபர் லேண்ட் பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. அசோலோ பாக்கர் கோதுமை, சோளம், கடுகு, பருத்தி, உருளைக்கிழங்கு



மற்றும் இதர காய்கறி பயிர்களுக்குப் பயன்படுத்தலாம். உயிர் உரங்கள் பயன்பாடு மூலம் செடிகள் ஆரோக்கியமாக வளரும். அதே சமயம் மண் சுகாதாரம் அதிகரிக்கும். அவைகளுக்கு பற்பல உபயோகங்கள் இருப்பதால் இதுபோன்ற நன்மை விளைவிக்கும் பாக்டீரியாக்களை தாவர வேர் வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியாக்கள் என்றோ அல்லது ரைசோ பாக்டீரியா என்றோ அழைக்கிறோம்.

**பயோ கேஸ்**

உயிர் வாயுக்கலன் பயோ கேஸ் என்பது மற்ற எரிபொருளைப் போலவே பயன்படுத்தக்கூடிய ஒரு உயிரி எரிபொருளாகும். இதில் பெரும்பாலும் மீத்தேன் வாயு உள்ளது. இது கரிமப் பொருட்களின் நொதித்தல் மூலம் பெறப்படுகிறது. பொதுவாக விவசாய மற்றும் கால்நடைக் கழிவுகள்தான் இந்த செயல்பாட்டில் உயிரி எரிபொருளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

நவீன சூழல் நேய சுகாதார கழிப்பறை எனப்படும் ஈகோ காஸ்டல் கழிப்பறைகள் என்பது, மனித மலத்துடன் நிலத்திற்கே திரும்பச் செல்லும் தண்ணீரையும் ஊட்டச்சத்துக்களாக மாற்றுவதற்கு சுகாதாரமான பாதுகாப்பான அமைப்பை வழங்கும் அமைப்பாகும். கழிப்பறைகளால் பல்வேறு நன்மைகள் உள்ளன. ஒரு நன்மை என்னவென்றால் இது எங்கு வேண்டுமானாலும் கட்டப்படலாம். மேலும் அவை பொதுமக்களுக்கு அணுகக் கூடியதாகவும் மலிவு விலையிலும் இருக்கும். சுத்திகரிப்பு அல்லது கழிவினை சுத்திகரிக்கத் தேவையில்லை என்பதால் தண்ணீர் மற்றும் மின்சாரத்தை சேமிக்கிறது


**வெட்டிவேர்**

புல்லுக்கும் வேருக்கும் இடைப்பட்ட பகுதியை வெட்டி எடுத்து பயிரிடப்படுவதனால் வெட்டிவேர் என்றும், ஆற்றின் இரு கரையிலும் வேலியாக அமைந்து மண் அரிப்பதை தடுப்பதற்காக பயன்படுத்தப்படுவதாக இருவேளை என்றும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். வெட்டிவேர் தர்ப்பைப் புல் வகையைச் சேர்ந்தது. கோடை காலத்தில் ஏற்படும் நீர்க்கடுப்பு, காய்ச்சல், சோர்வு, தோல் நோய்கள், மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளைத் தீர்க்கும் மருத்துவ குணம் வாய்ந்த வெட்டிவேரில் செய்யப்பட்ட பாய் விசிறி போன்றவைகளை கோடை காலத்தில் பயன்படுத்தலாம். இது உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியதும் மன அழுத்தத்தைப் போக்கக் கூடியதாகும். ■



M. சுஹாசினி, 11-ஆம் வகுப்பு

# கோடைக்காலப் பாதுகாப்பு



**கோடைக்காலத்தில் வெயில் மிகவும் அதிகமாக இருக்கும். அனைவருக்கும் இந்த நேரத்தில் உடல் ரீதியான பாதிப்புகள் ஏற்படும். கோடைக்காலத்தில் குழந்தைகளுக்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம். அம்மை நோய் இந்த நேரத்தில்தான் அதிக அளவில் பரவுகிறது. உடல் சூடு அதிகரித்து நோயின் தாக்கம் அதிகரிக்கிறது. இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.**

- கோடைகாலத்தில் பொதுவாக அதிக அளவு நீர் அருந்த வேண்டும். இதனால் பல நோய்களைத் தடுக்கலாம்.
- கோடையில் பருத்தி ஆடைகளை அணிய வேண்டும் அல்லது மெல்லிய ஆடைகளை அணிவது உடலுக்கு நல்லது.
- கருப்பு நிற ஆடைகளைத் தவிர்க்க வேண்டும்.
- சத்து நிறைந்த பழங்கள், காய்கறிகள், ஜூஸ் வகைகள், கரும்புச்சாறு, நுங்கு, தர்பூசணி, வெள்ளரிக்காய் போன்ற இயற்கை உணவுகளைச் சாப்பிடலாம்.
- அதிகமாக வெயில் இருக்கும்போது குழந்தைகளும், வயதானவர்களும் வெளியே செல்லக்கூடாது.
- வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் குளிர்சாதனப் பெட்டியில் இருந்து தண்ணீர் எடுத்து குடிக்கக் கூடாது.
- மண்பானை நீர் குடிப்பது உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.
- காலை, மாலை இரண்டு வேளையும் குளிக்க வேண்டும்.
- கோடை விடுமுறையில் தொலைக்காட்சி மற்றும் செல்போன் பார்த்து நேரத்தை வீணடிக்காமல் நீச்சல், சிலம்பம், கணினி போன்ற பயிற்சிகளில் சேர்ந்து கற்றுக் கொள்ளலாம்.
- மழைக்காலங்களில் தண்ணீரை வீணடிக்காமல் சேமிக்க வேண்டும்.
- அதிக அளவில் மரக்கன்றுகளை நடுவதினால் குளிர்ச்சியான சூழல் நிலவும். ■



Y. மதுமிதா, 8-ஆம் வகுப்பு

# நீர் சேமிப்பு



- நீங்கள் எவ்வளவு குறைவாகப் பயன் படுத்துகிறீர்களோ அவ்வளவு அதிகமாகச் சேமிக்கிறீர்கள்! .
- பிரகாசமான எதிர்காலம் சுத்தமான தண்ணீருடன் தொடங்குகிறது.
- தண்ணீர் இல்லாமல் பூமியில் உயிர் இருக்காது.
- நீர் இயற்கையின் இயக்கி. தயவு செய்து காப்பாற்றுங்கள்.
- ஒவ்வொரு சொட்டு சுத்தமான தண்ணீரும் நமக்கு முக்கியம்.
- தண்ணீரைச் சேமிக்க மறக்காதீர்கள். இல்லை எனில் தண்ணீர் ஒரு நாள் உங்களை மறந்துவிடும்.
- தண்ணீர் தங்கத்தை விட விலை மதிப்புள்ளது.
- தண்ணீரைப் பயன்படுத்துங்கள். ஆனால் தண்ணீரை வீணாக்காதீர்கள்.
- தண்ணீர் பற்றிய முழக்கம். வாழ்க்கைக்கான முழக்கம்.
- எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் தண்ணீர் இல்லாமல் வாழ முடியாது.

---

# பூமியைக் காப்போம்!



அண்ட சராசரத்தில்
அனைத்து உயிர்களுக்கும்
அடைக்கலம் தந்த
ஒரே கோள் நம் பூமி!
உண்ண உணவு
இருக்க இடம்
உதவிக்காத்த பூமியே
நம் முதல் சாமி!

உண்டகத்துக்கு இரண்டகம்
உருவாக்கலாமோ?
உலகை ஆழ்துளையிட்டு உடைத்தால்
உருவாகாதோ மேலும் பல சுனாமி
உலகளந்த பெருமானை
நீ அளக்க இயலுமோ
உலகை முன்னேற்ற நினைத்து
உதித்த அறிவியல் புரட்சி
உயிருடன் புதைக்க நாமானோம்
நோய்களின் பினாமி.
உன் சந்ததியர் வாழ
உன்னதமான பூமியை
உருமாறாமல் பரிசளிக்க
உலகை காக்கும் உறுதியை
உன் செயலில் தினம் நீ காமி. ■



D. ஹேமஸ்ரீ, 9-ஆம் வகுப்பு

# கடல்

[பாடல்]

கடல் அம்மா கடல் அம்மா!
நீ ரொம்ப அழகம்மா!
உன்னுள் வாழும் அத்தனை உயிர்களையும்
வாழ வைப்பது நீயம்மா!
நீ சந்தோஷமாக இருக்கும்போது
அலைகளாகத் துள்ளிக் குதிக்கின்றாய்!
நீ துக்கமாக இருக்கும்போது சுனாமியாய் மாறி
அனைவரையும் அழிக்கின்றாய்!
நின் கண்ணீர் துளிகள் எல்லாம்
கடல் நீராக மாறி உப்பாக மாறியதே!
மனிதனை வாழ வைப்பதும் நீயே!
மனிதனை அழிப்பதும் நீயே!
என் கடல் அன்னையின் மடியில்
நான் சவாரி செய்கின்றேன்!



D. ஹேமஸ்ரீ, 9-ஆம் வகுப்பு

# இயற்கை பயன்கள்

இயற்கை என்பது இயல்பாகவே உருவானவை. இயற்கை வளங்களை பொறுத்தே நமது வாழ்வாதாரம் அமைகின்றது. இயற்கையின் கொடையான இயற்கை வளங்களைக் காப்பது ஒவ்வொரு தனிமனிதனுடைய சமூகத்தினுடைய தலையாயக் கடமையாகும்.

**இயற்கை சூழல்**

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் இயற்கையைச் சார்ந்தன. எனவே இயற்கை சூழலைக் காப்பது மிக மிக அவசியம். இயற்கையில் கிடைக்கும் இயற்கை வளங்கள் மட்டுமின்றி பூமியை குடைந்து பெறுகின்ற வளங்களும் மிக முக்கியமானவை ஆகும். ஆதி முதலே மனிதனின் வாழ்க்கையானது இயற்கையைச் சார்ந்தே உள்ளது. இயற்கையான சூழலில் மனிதர்கள் வாழ்ந்த நிலை மாறி தற்போது இயற்கை விட்டு வெகு தூரம் சென்று விட்டோம். ■



K. லேகா ஸ்ரீ, 6-ஆம் வகுப்பு

# அனுபவப் பகிர்வு

அனைவருக்கும் வணக்கம். நான்தான் உங்கள் ஹரிப்பிரியா. நான் என்னுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கைக்கு முன்னேற்றமாக இருக்கும் என் அம்மா, அப்பா, நண்பர்கள் இவர்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். என் வாழ்க்கையோட வழிகாட்டி அம்மா, அப்பா. என்னுடைய திறமைகளை வெளிக்கொண்டு வந்தது அருணோதயா. என்னுடைய குடும்பம் ஒரு குருவிக் கூடுபோல் இருக்கும். அதில் என்னுடைய அம்மா, அப்பா, என் தங்கை, நான் என சிறு கூட்டில் வாழ்கின்றோம். எங்கள் குடும்பத்தைப் பற்றி சில நபர்கள், பெண் குழந்தைகளுக்குப் படிப்பு எதற்கு? இவர்கள் வேறு வீட்டிற்குப் போகப்போகிறார்கள். அதனால் இவர்களை விடுதிக்கு அனுப்பிவையுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய பெற்றோர்கள் அதையெல்லாம் காதில் வாங்காமல், எங்கள் இருவரையும் 12-ஆம் வகுப்புவரை கஷ்டப்பட்டு படிக்க வைத்தார்கள்.

இவர்களுடைய மகள் ஹரிப்பிரியாவாக நான் தேடித்தந்த பெருமை என்னவென்றால், அருணோதயா குழந்தைகள் சங்கம் மூலம் ஒடிசா என்ற மாநிலத்துக்குச் சென்று, தேசிய அளவில் பங்கேற்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. இந்த கலந்துரையாடலில் நானும் என் அண்ணன் ஜீவாவும் கலந்துகொண்டோம். இந்த பயணம் இன்னும் இனிப்பான நினைவுகளை நினைவுபடுத்துகிறது. இதனைத் தொடர்ந்து அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நடக்கும் அனைத்து செயல்பாடுகளிலும் கலந்துகொண்டு அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டேன். அதில் வெற்றியும் பெற்றேன். இதனால் எனக்குள் ஒவ்வொரு திறமையும் வெளியே வருவதைக் கண்டேன்.

என்னுடைய பயணம் இத்துடன் நின்று விடாது. என் பெற்றோர் ஆசைப்பட்டபடி கல்வி மற்றும் திறமையை வளர்த்துக் கொண்டு, நல்ல ஒரு வேலைவாய்ப்பினைப் பெற்று, என் கடைசி நாள்வரை என்னுடைய தாய் தந்தையைக் காப்பாற்றுவேன். இந்த வாய்ப்பினைக் கொடுத்த நிர்வாக இயக்குனர் அவர்களுக்கும், செல்வி மேடம், சுரேஷ் அவர்கள் இருவரும் எனக்கு பாதுகாப்பு அளித்து என்னை வழிநடத்தியமைக்காக நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். ■



ஹரிப்ரியா

# இரண்டு தோழிகளின் கதை

ஒரு ஊரில் இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். இருவரும் நண்பர்களாக இருந்தார்கள். ஒரு குழந்தையின் பெயர் பாத்திமா. மற்றொரு குழந்தையின் பெயர் மகாராணி. இவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள். இவர்கள் எது செய்தாலும் ஒன்றாகவே செய்வார்கள். அதனால் அந்த ஊருக்குள் இவர்கள் இருவருக்கும் நல்ல நண்பர்கள் என்று பெயர். சில நாட்களுக்குப் பிறகு, அந்த ஊரில் குழந்தை கடத்தும் நபர்கள் வந்தார்கள். தெருவில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கடத்தல்காரர்கள் வண்டியில் கடத்திச் சென்றார்கள். மற்ற குழந்தைகள் பயந்து வீட்டிற்குச் சென்றார்கள். ஊர் மக்கள் அனைவரும் மிகவும் பயந்து போனார்கள். இதில் பாத்திமாவின் அம்மாவும், அப்பாவும் பயந்து வேறு ஊருக்கு சென்றுவிட்டார்கள். அதனால் இரண்டு நண்பர்களும் பிரிந்துவிட்டார்கள்.

ஒரு வருடத்திற்கு பிறகு நாடாளுமன்ற தேர்தல் வந்ததினால் பழைய ஊருக்கு பாத்திமாவின் பெற்றோர்கள் வந்தார்கள். குழந்தைக் கடத்தல் நடந்தும் ஏன் இங்கு வந்தோம் என்றால், ஓட்டு போடுவது ஒவ்வொருவரின் கடமை. இதை யாருக்காகவும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்பதால் வந்தோம் என்றார்கள். ஊர் மக்கள் அனைவரும் பாத்திமாவின் அம்மா, அப்பாவிடம் நீங்கள் எங்கும் செல்ல வேண்டாம். கடத்தல்காரர்களை காவல்துறை கைது செய்து விட்டார்கள். நீங்கள் பழையபடியே இந்த ஊரில் வசிக்கலாம் என்றுகூறினார்கள். பிரிந்த நண்பர்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்தார்கள். ■



A. சபானா, சடையன்குப்பம்

# தோழிகளும் கைவிடப்பட்ட முதியோரும்




என் பெயர் மதுமிதா. நான் சென்னையில் உள்ள கொருக்குபேட்டையில் வசிக்கிறேன். நான் அண்ணாநகர் பகுதியில் உள்ள குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். 41வது வார்டு நகரசபை பிரதிநிதியாகவும் CCRMCயில் உறுப்பினராகவும் உள்ளேன்.

எப்போதும் போல் நான் பள்ளிக்குச் சென்றேன். பள்ளிக்கு வெளியே ஒரு தாத்தாவும் பாட்டியும் இருக்கிறார்கள். அவங்களப் பார்த்தா சாப்பிடாத மாதிரி இருக்குன்னு என் தோழிகள் சொன்னார்கள். பள்ளி முடிந்து வீட்டுக்கு செல்லும்போது நானும் என் தோழிகளும் அந்த தாத்தா, பாட்டிய விசாரித்தோம்.

நீங்க ஏன் இங்க இருக்கீங்க? உங்களுக்கு வீடு இல்லையா? என்று கேட்டதற்கு நாங்கள் பல வருஷமாக இங்குதான் இருக்கோம். எங்களுக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் நன்றாகத்தான் வளர்த்தோம். ஆனால் எங்களை தனியே விட்டு விட்டார்கள் என்று அழுதுகிட்டே சொன்னாங்க.

நானும் என் தோழிகளும், நீங்க கவலைப்படாதீர்கள். நாங்கள் இருப்போம் என்று ஆறுதல் சொன்னேன். அதற்குப் பிறகு அவங்க அழுகையை நிறுத்திட்டாங்க. நானும் என் தோழிகளும் எங்களுக்கு எங்கள் பெற்றோர் ஸ்னாக்ஸ் வாங்குவதற்காக கொடுக்கும் பணத்தைச் சேர்த்து, தினமும் காலை டிபன் வாங்கி கொடுப்போம். எங்களுக்கு வீட்டில் கொடுக்கும் உணவுகளை தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கொடுத்துவிட்டு நாங்கள் மதியம் பள்ளியில் சாப்பிடுவோம். ஈவினிங் டீ வாங்கிக் கொடுப்போம். இரவு எங்களால் வர முடியாததால் ஈவினிங் எங்களிடம் உள்ள காசுகளைக் கொடுத்துவிட்டு வருவோம்.

அவர்களுக்குத் துணியும் இல்லாததால் புடவை, வேஷ்டி, சட்டை எடுத்துக் கொடுப்போம். ஒரு நாள் அருணோதயாவின் சிசிஆர்எம்சி மீட்டிங் வைத்தார்கள். அதில் தாத்தா பாட்டியைப் பற்றி சொல்லியிருந்தேன். அவர்களிடம் ஹாஸ்டல் போக விருப்பமா என்று கேட்டார்கள். நாங்களும் இதுகுறித்து முன்பே தாத்தாவும் பாட்டியிடம் பேசி இருந்ததால் அவர்கள் ஹாஸ்டல் போக விருப்பம் என்று சொன்னார்கள். அவர்களை ஹாஸ்டலில் சேர்ப்பதற்கான முயற்சியில் அருணோதயா பணியாளர்கள் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு மிக்க நன்றி தெரிவித்தோம். தாத்தாவும் பாட்டியும் எங்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ■



**Y. மதுமிதா, 8-ஆம் வகுப்பு**

கவிதை

# கல்வி



கல்வி என்னும் வித்து
அழிக்க முடியாதச் சொத்து
அள்ள முடியாத முத்து
கல்வி! அந்த அறிவின் ஊற்றோ!
கார்மேகத்தின் மழையோ
கடலின் ஆழமோ!
இமயத்தின் உயரமோ!
வானத்தின் நீலமோ!
உன்னை நினைக்கும் போது
மனத்தில் ஊற்று எடுப்பது கூட
உன்னைப் பருகியதாலோ!



C. மனுஸ்ரினி, 7-ஆம் வகுப்பு

# போதை

வானிற்கு நிலவு அழகு
எரிவதில் சூரியன் அழகு
பறப்பதில் புறா அழகு
போதை இல்லையெனில்
வாழ்க்கை அழகு!



P. உதயபிரியன், 10-ஆம் வகுப்பு

# அழகு


வானம் அழகு !
வானத்தில் இருக்கும் சூரியன் அழகு!
இரவு அழகு!
இரவில் நட்சத்திரம் அழகு!
கடல் அழகு!
கடலில் துள்ளும் மீன்கள் அழகு!
காடு அழகு !
காட்டில் வளரும் மான்கள் அழகு!
நந்தவனம் அழகு!
நந்தவனத்தில் பூக்கள் அழகு!
மழை அழகு! வெயில் அழகு!
இயற்கையோடு இணைந்தால்
உலகம் முழுவதும் அழகு!
கவலை முழுவதும் மறந்தால்
இந்த வாழ்க்கை
முழுவதும் அழகு!



J. தர்ஷினி, நேரு நகர்

(A Favorite read)

# The Summer season



Summer season is the hottest season of the year. This season starts in April and ends in June. In this season the sun shines very brightly and days are longer and nights are shorter. Children love this season the most because they have lovely summer vacation and they enjoy fully. Children play many outdoor and indoor games.

We get so many fruits in this season like mangoes, watermelon, pineapple, jack fruit, grapes etc. Many beautiful flowers bloom in this season. People like to sit near the fan wear thin cotton cloth to protect themself from heat. Children love to swim in pools. People enjoy this season by going to the beach or hill stations. In summer school and colleges are closed for summer vacation. Summer vacation is a wonderful season for children with so much fun happiness and enjoyment.



T. ஜீவிதா, 8-ஆம் வகுப்பு

Courtesy Facebook

Dear Sun,
Please go To settings>
Display Brightness!
And reduce IT....Tooo Hot
To HAndle!!

# Dear Sun



I have Not changed Any
SEttings... Please goto your
Settings And...

- increase number of trees
- Reduce carbon Emissions levels
- Reduce concrete Jungles

Basically switch To human mode
from Auto mode

by: Rishan Miracle
IX D Royapuram





ரிஷன் மிராக்கிள், 9-ஆம் வகுப்பு

# சிட்டெறும்பு பேசுது புத்தகம் பிரதிபலிப்பு






சிட்டெறும்பு பேசுது புத்தகம் படித்ததில் மாணவர்களின் கருத்துக்கள் படைப்புகள் அருமையாக இருந்தது. குழந்தைகள் என்றால் என்ன?, அவர்களின் தற்போதைய நிலை, குழந்தையின் உரிமை போன்றவை புத்தகத்தின் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

பேரிடர் நேரங்களில் பிறருக்கு உதவும் பண்பு மாணவர்களிடம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிய முடிந்தது. சென்னை மாநகராட்சியில் குழந்தைகளின் குரலை உணர முடிந்தது. மாணவர்களின் தனித்திறமை வெளிப்படுத்தவும் விழிப்புணர்வு பெறவும் இப்புத்தகம் மேலும் வாய்ப்பு அளித்துள்ளது. இந்த புத்தகத்தைப் படித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மாணவர்களுக்கு வாழ்த்துக்கள். நன்றி.

திருமதி. **K.கீதா**, தலைமை ஆசிரியர்,
சென்னை ஆரம்பப் பள்ளி, ஆர்.ஆர். நகர்.


சிட்டெறும்பு பேசுது புத்தகத்தில் என்னுடைய படம் வந்ததால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மீண்டும் சிட்டெறும்பு புத்தகத்தில் ஆங்கிலத்தில் ஒரு கதை எழுதுவேன். அதை என் நண்பர்களுக்கும் தெரிவிப்பேன். அருணோதயாவிற்கு நன்றி!



**S. சக்தி முருகன்,** 10-ஆம் வகுப்பு


Airsite
R. Issravel



Airsite
SAVE ME
S. MUGUNDHA
Std: 10th


J. தர்ஷனி
Stop Child Labour.
START EDUCATION










**உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும் வாழ்த்துகளுடன் வரவேற்கிறோம்**